Arima Nokku

ஏப்பிரல் 2025

ISSN 2320-4842 (Print)
ISSN 3049-2688 (Online)

# அரிமா நோக்கு



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்.

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் ஏற்பிணைப் பெற்ற ஆய்விதழ்

UGC - CARE LISTED AND PEAR REVIEWED JOURNAL

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
19 : 2 ஏப்ரில் 2025

ஆசிரியர்
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா.கணேசன் (அமெரிக்கா)
நா.சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு.பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன்
(பிரான்ஸ்)
மனோன்மணி தேவி
(மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ.இலக்குமிநாராயணன்
கோ.பழனி
மு.வையாபுரி
சி.சிதம்பரம்
பா.விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச.திருநாவுக்கரசு
ப.குமார்
கி.துர்காதேவி
தே.ராஜகுமார்
த.பாலமுருகன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல்
நாடுகளிலும் உள்ள
தமிழியல் அறிஞர்கள்
பல்கலைக்கழகப்
பேராசிரியர்கள் மற்றும்
படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

Illustration Of Native Culture And Host Culture:
A Critical Study of Bharati Mukherjee s Select Fiction
M. Parvatha Varthini - Dr. C. Ramya 258
Exploring Communal Trauma: A Comparative Study of
Khushwant Singh's Train to Pakistan and
Manohar Malgonkar's a Bend in the Ganges
Mr. Raja - Dr. M. Sumithra 262
Exploring the Rural Realities: Perumal Murugan's
Narrative Voice in Tamil Literature
P. Elayarani - Dr.K. Maheswari 268
Portrayal of Victimized Citizens and the Corrupt Hungry
Rulers in Arun Joshi's The City and the River: An Appraisal
Premchandar. P - Dr. S. Chelliah 275
Pathetic Plight of the Indian Workers: A Post Humanist Study
of Mulk Raj Anand s Coolie: An Appraisal
R. Esther Reshma - Dr. S. Bharathiraja 279
பொருள்சார் பண்பாடு நோக்கில் - சங்கு வளையல்
செ. விஜய்சுந்தர் - ஏ. பால்பிரபு சாந்தராஜ் 283
சங்க இலக்கியத்தில் போர்கருவிகளின் சிறப்புகள்
மா. ஜெயலட்சுமி - முனைவர் சி. கணேசன் 287
உரைகளும் உரையாசிரியர்களும்
முனைவர் ஏ. கோதண்டராமன் 290
வ. உ. சி.யின் மறக்கவொண்ணா தமிழ்த் தொண்டுகள்
முனைவர். ம. தாமரைச்செல்வி 297
ஆன்மீகக் கல்வியின் அவசியம் குறித்து வேதாத்திரி மகரிசி
அவர்கள் வலியுறுத்தும் கருத்துக்கள்
த. கௌரி - முனைவர் க. சுமதி 302
ஈரம் கசிந்த நிலத்தில் - மாறாப் பண்பாட்டின்
மண்ணில் விழுந்த விதை - அம்மணி
ரா. கவிதா - முனைவர் செ. இளையராஜா 306
பேடிக்கூத்து அன்றும் - இன்றும் - பெ. வெங்கடேஷ் 311
ஆற்றுப்படை இலக்கிய அமைப்பும் இலக்கணமும்
திருமதி ம. பாக்கியலட்சுமி - முனைவர் சு. சதீஷ்குமார் 316
சூழலியக் கோட்பாடு - முனைவர் பி.அனுராதா 320
கவிஞர் பழநிபாரதியின் கவிதைகளில் அழகியல்
வ. ஜெயக்குமார் 325
ஜெயகாந்தன் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வாதாரம்
ஆர். பிரமிளா - முனைவர் கோ. சுரேஷ் 329
மந்தரை (கூனி) - திருமதி பா. பத்ரகாளி 334
திருப்பரங்குன்றத்தின் மகிமையும் செவ்வேளின் அருளும்
முனைவர் இரா.விஷ்ணுப்பிரியா 338
வரலாற்று அடிப்படையில் சிலம்பும் -முதுவரும்
முனைவர் அ. மகபூபு 342
சங்க இலக்கியம் காட்டும் ஆநிரை வளர்ப்பும் மருத்துவமுறையும்
முனைவர் ம. சித்ரகலா 346
ஆசிரியம்... வாழ்வின் உயிர்மை - முனைவர் ச.சந்திரகலா 351
சைவ சித்தாந்தம் முன்வைக்கும் உயிர் - த. பாலமுருகன் 354
தீர்த்தயாத்திரை நாவலில் பெண் சித்தரிப்புகள்
ப. அருணா - முனைவர் இரா. கோகுல் 356
சங்க இலக்கியத்தில் தோழி உளவியல் - தே. ராஜகுமார் 360
முதுமொழிக் காஞ்சியில் நட்பு - கு. நளினி 364
வர்மக் கலையும் மருத்துவக் குணங்களும் - க. இராஜா 367
பாரதி ஒரு கடல் - முனைவர் ச. இராஜலதா 372
பட்டினப்பாலையில் வணிகம் - முனைவர் து. விசாலாட்சி 375
திருமூலர் பாடல்களில் பன்முகச் சிந்தனைகள் - கோ. மலர்விழி 378
சிலப்பதிகாரத்தில் தமிழனின் பண்பாடுகள் - இரா. வீரமணி 382
கணினித் தமிழும் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பும்
ச. இலக்கியசங்கீதா - க. பிரியா 387
அறிவியல் நோக்கில் சைவசித்தாந்த தத்துவங்கள்
வீ. பொன்னுசாமி - நா. சண்முகம் 390
சங்க இலக்கியத்தில் போர்ச்சூழல் - ரா.திவ்யா 394

https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சங்க இலக்கியத்தில் போர்ச்சூழல்

**முனைவர் ரா. திவ்யா**
உதவிப்பேராசிரியர்
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி

## முன்னுரை

இவ்வுலகில் போராட்டங்கள் என்பன புதியனவல்ல. பறவைகளும், விலங்குகளும் தங்களுடைய இன வளர்ச்சிக்காகவும், இனப்பெருக்கத்திற்காகவும் போராட்டங்கள் நடத்துகின்றன. மனிதர்களிடையே உணவு, உடை, இருப்பிடத்திற்காக போராட்டங்கள் நடைபெறுகின்றன. எனவே மனிதனுடைய வாழ்வில் போர் என்பது தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. இதனையே,

**ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்**

**புதுவது அன்று இவ்உலகத்து இயற்கை** *(புறம்.76:1-2)*

என்ற பாடல் வரிகள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொல்லுவதும், ஒருவருக்கு ஒருவர் போரிட்டுத் தோற்றுப் போவதும் இவ்வுலகத்தில் புதியது அன்று எனக் குறிக்கின்றன.

போர் என்னும் சொல் பொரு எனும் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்த பெயர்ச்சொல் ஆகும். போரானது உடல் வலிமையைக் கொண்டுதான் உறுதி செய்யப்பட்டது என்பதை மறுக்க இயலாது". என்பதை (இலக்கியங்கள் பாட்டும் போர்-இராக்கு.க.) பண்டைக் காலத்தில் போர் தவிர்க்க இயலாததாகவும் காலத்தின் தேவையாகவும் விளங்கியது **(பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறநெறிகள்,** ப.137) என்று மு.வே. முத்துலக்குமி குறிப்பிடுகிறார்.

## போர்க்கான காரணங்களும், போரின் வகைகளும்

மக்களைக் காக்கும் பொருட்டு மன்னர்களிடையே போர் நிகழ்ந்தமையைக் காணமுடிகிறது. இதனால் போரிடுபவர்களிடையே சில விதிகளும் இருந்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நிகழ்ந்த போர்கள் அறப்போர்களே ஆகும். ஒரு நாட்டின் அரசன் தன் பகைவரன எதிர்த்துப் போர் செய்யப்போவதை தன் வீரர்களுக்கு அறிவிக்கிறான். அதனைக் கேட்ட வீரர்களுடைய உள்ளம் பூரிக்கின்றன. போர் என்ற சொல்லைக் கேட்டவுடன் வீரர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் போர் ஏற்படுவதற்கு ஆறு வகை காரணங்கள் உள்ளன. சங்க காலத் தமிழர்களின் போர் மரவுகள் அறப் போர் முறையைச்சார்ந்தவை. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள போரியல் பதிவுகள் யாவும், பண்டையத் தமிழர் நிலத்தில் நிகழ்ந்த உண்மை வரலாற்றுக்கு முக்கிய சான்று என்று **கயல்விழி இளங்கோவன் தமிழ்பேராய்வு ஆய்விதழ்** *28.07.2022* எடுத்துரைப்பதை அறியமுடிகிறது.

ஆசை, பாதுகாப்பு, பகை, தண்டனை, மறம், அருள் என்னும் அறுவகைக் காரணத்தால் பிறக்கும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை, புகழாசை, விண்ணாசை என ஐவகைப்படும். பழிதீர்ப்பு, பழம்பகை, பொறாமை எனப் பகை மூவகைப்படும். பிறவரசரின் இகழ்ச்சி பற்றியதும், திறையிறாமை பற்றிய தும், படையெடுப்புப் பற்றியதும் எனத் தண்டனை மூவகைப்படும். மறம் ஒன்றே அது கடுமறம். தன் குடிகள் மீது கொண்ட தும், பிறர் குடிகள் மீது கொண்டதும் என அருள் இருவகைப்படும் (பழந்தமிழாட்சி, ப.101) என்று ஞா.தேவநேயன் போருக்கான காரணத்தினைக் கூறுகிறார். **தன்னைத் தானே காத்துக்கொள்ள வேண்டும் எனும் மன இயல்பே போருக்குக் காரணம்** (சங்க இலக்கியத்தில் வேந்தர்கள், ப.136) என சிக்மண்ட் பிராய்டு போன்ற உளவியலாளர் கூறுவார் என அரங்க.இராமலிங்கம் குறிப்பிடுகிறார்.

**எஞ்சா மண்நசை, வேந்தனை வேந்தன்**

**அஞ்சுதகத் தலைச்சென்று அடல்**
**குறித்தன்று** (தொல்.1008)

என்று தொல்காப்பியத்தில் மண் ஆசை காரணமாகப் போர் தொடுத்தல் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**வையம் காவலர் வழிமொழிந்து ஒழுக**

**போகம் வேண்டி பொதுச்சொல்**
**பொறாஅது**

**இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப**
(புறம்.8:1-3)

என கபிலர் சேரமான் கடுங்கோ வாழியாதனைப் பற்றிக் கூறும் போது தனது நாட்டினைச் சிறது எனக் கருதி விரிவு படுத்தும் எண்ணத்தினை உடையவன் என்று கூறுகிறார். பூமி முழுவதை தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற ஆசையால் போர் செய்து வென்று பூமி முழுவதும் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தால் புகழ் ஏற்படும என்ற காரணத்தால் போரிட்டான் என்பதை இதனால் உணர முடிகிறது.

நான், எனக்கு, என்னுடையவை என்ற சுயநலமே எல்லாத் துன்பங்களுக்கும், போர்களுக்கும் காரணமாகும். (போர்ப்பறை, ப.197) என்று தளையசிங்கம் கூறுகிறார். போருக்குரிய முதன்மைக் காரணமாகப் புகழ் வேட்கையைக் குறிப்பர் (சங்க இலக்கியத்தில் வேந்தர்கள், ப.138) என்று அரங்க.இராமலிங்கம் கூறுவார்.

**அறக்கோட்பாடுகள்**

கொலை மலிந்த போர்க்களத்தில் அற அடிப்படையிலான சில வரன்முறைகளானது சங்க காலங்களிலும் இருந்திருக்கின்றன.

**கொழுப்புஆ எறிந்து, குருதி தூஉய்**

**புலவுப்புழுங்கு உண்ட வான்கண் அகல்**
**அரை** (அகம்.309:5-6)

என்று அகநானூற்றுப் பகுதியினால் ஆகோள மறவர் கொழுத்த பசுவை வெட்டி உண்ணும் வழக்கத்தினர் என்பதை அறியலாம். ஆனால் புறப்பாடலில் பசுவும், பார்ப்பனரும் பாதுகாக்கப் பெற்றனர்.

**புன்றலை மடப்பிடி நாணக்**

**குஞ்சர மெல்லாம் புறக் கொடுத்தனவே**
(புறம்.308:10-11)

எனப் போர் வீரர்கள் புறங்காட்டினால் பெண்டிர் நகைப்பர். நாணுவர் என்பதனைப் புலவர் பிடி, களிற்று யானைகளில் வைத்துக் கூறுவர். இவ்வாறு போரில் பின்னடைதலும், புறமுதுகு காட்டலும், முதுகில் புண்படலும் நாணத்தக்க செயல்களாகக் கருதப்பட்டது.

**வாஅள் வாய்த்த வடு ஆழ் யாக்கையொடு**

**கேள்விக்கு இனியை, கட்கு இன்னாயே**
(புறம்.167:3-4)

எனப் போரிலே மார்பில் விழுப்புண் பெற்ற வருடைய, சிறப்பும் பெறாதவருடைய இழிவும் கூறப்படுகின்றன.

போர்ப் குறிப்பு இல்லாதவனோடு பொருதலும், தன்னுடைய கருத்தினை வெளிப்படுத்தாமல் நீண்ட காலங்கள் கோட்டையினை அடைத்து உள்ளே வாளால் தாக்குதல் ஆகியன நாணத்தக்க செயல்களாக உள்ளன என்று கருதப்பட்டது. வீரநிலைக்காலப் போருக்கும், சங்க காலப் போருக்கும் வேறுபாடுகள் இருந்துள்ளன என்பதை மேற்கூறியவற்றின் மூலம் அறிய முடிகிறது. அரசனுக்கு மட்டுமல்ல அனைத்து ஆண்களுக்கும் வீரமும், போரில் வெற்றியும் இல்லையேல் நாணப்படுவர். அதனால் வீரமானும் ஆண்மையின் இலக்கணமாகப் பார்க்கப்பட்டது. என

எல்லிஆனைக்குமார் (சான்லைக்ஸ் பன்னாட்டு தமிழியல் ஆய்விதழ்) ஆசிரியர் குழு உள்ளார்.

### போரிற்கான வரையறை

வீரநிலைக் காலப்போர்களின் ஆனிரை, பார்ப்பனர், பெண்டிர், பிணியாளர், மகப் பெறாதவர் போன்றோர் போரிற்கு செல்லவில்லை. (சங்க இலக்கியத்தில் புறப்பொருள், ப.86) என்று கு.வெ. பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

போரில் புறங்கொடுத்தல் இழிந்த செயலாகவும் அவ்வாறு புறமுதுகிட்டோர் மீது வாளினை வீசுதல் அறக்கேடாகவும் கருதப்பட்டது. போருக்குரிய வரையறைகளைப் புலவர்கள் அமைத்து இருந்தனர். எவரேனும் முறையினைக் கடந்து வரையறை இல்லாமல் போர் செய்தால் அவர்களைப் புலவர்கள் பாடமாட்டார்கள். போர் செய்யும் போது ஒத்த படை இல்லாதவனையும், படை கொள்ளாதவனையும் போரிடுவது அறம் அன்று என்கிற வரையறை கொண்டு இருந்தனர்.

சிறப்புடைய அரசியலாவன, மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறாதோனையும், மயிர் குலைந்தோனையும், அடிப்பிறக்கிட்டோனையும், பெண் பெயரோனையும், பிறவும் இத்தன்மையுடையாரையும் கொல்லாது விடுதலும் உண்டு (அறப்போர், பக.21, 22) என்று கி.வா.ஜகந்நாதன் போர் செய்யும்; அறநெறியினைக் கூறுகிறார். புறநானூற்றிலும் போரிடையே இத்தகைய அறச்செயல்கள் செய்த வீரப் பெருமக்களின் வரலாறுகள் உள்ளதை அறியமுடிகிறது.

### போர் அறம்

போர் செய்யும் போது அறநெறி உடையவர்களாய் இருத்தல் வேண்டும். தன்னை விட வலிமை குறைந்தவர்களிடம் போரிடுவது அறமாகாது. இதனை,

**ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்**
**பொன் போற் புதல்வர்ப் பெறாதீரும்**
**எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென**
(புறம்.9:1-5)

என்று நெட்டிமையார் பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய பாடலால், அவன் படை பெருக்கமும் முன்னர் ஆநிரை முதலியவைகளைக் காத்துக் கொள்ளுமாறு பகைவர்க்கு அறிவித்தான் என்பதை அறிய முடிகிறது. இப்பாடல் போரின் கொடுமையினால் விலக்கப்பட வேண்டியவர்களைப் பற்றிக் கூறுவதை அறியமுடிகிறது. இதுபோல் இப்போர் அறமானது.

### உன்னம் மரம்

உன்னம் (சகுனம் பார்க்கப் பயன்படுத்து பவை) என்கிற ஒருவகையான மரத்தினைச் சகுனம் பார்க்கப் பயன்படுத்தினர் என்பதை,

**உன்ன மரத்து துன் அருங்கவலை** (புறம்.3:23)

இந்த உன்ன மர தழைத்து இருந்தால் போரில் வெற்றி கிடைக்கும் என்றும் காய்ந்து இருந்தால் தோல்வி கிடைக்கும் என்றும் நம்பினர் என்று அறியலாகிறது. சகுனம் பார்த்தலுக்கு மரத்தையும் பயன்படுத்தி இருக்கின்றனர் பண்டையோர் (புறநானூற்றுப் பேழை, ப.70) என்பதை மு.கோவிந்தராசன் வாயிலாக அறியமுடிகிறது.

### போருக்குரிய திணைகள்

தொல்காப்பியம் புறத்திணையியலில் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுவகைத் திணைகள் குறிப்பிடப்படுகின்றன. இதனையே புறப் பொருள் நூலானது,

**வெட்சி நிரைக்கவர்தல் மீட்டல்**
**கரந்தையாம்**
**வட்கார் மேல் செல்லுவது வஞ்சியாம்**
**உட்கா(து)**
**எதிரூன்றல் காஞ்சி, எயில் காத்தல் நொச்சி**
**அது வளைத்தலாகும்; உழிஞை, அதிரப்**
**பொருவது தும்பையாம் பொருகளத்து**
**மிக்கோர்**
**செருவென்றது வாகையாம்**

என்று புறப்பொருள் வெண்பா மாலை கூறுகிறது. இவற்றுள் வெட்சி, உழிஞை, தும்பை ஆகியன போரைப் பற்றியவை. இவற்றுள் வெட்சியில் கரந்தைத் திணையையும், உழிஞையில் நொச்சித்திணையையும் தொல்காப்பியர் கூறுகிறார்.

### போர்ச்சிறப்பு

நின்னை எதிர்த்து வந்தோர் நின் தூசிப்